327 327

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No

OFFICE OF THE REGISTRAR ... 15 NOV 1946

# உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

| மலர் 1 | திருவத்திபுரம் 20—10—46 வியஹெ அற்பசி 4உ ஞாயிறு | இதழ் 12 |
|---|---|---|

# மறைந்தது திராவிடத்தின் பேரொளி

## மக்களின் ஆராத்துயரம் பெரியாரின் பெருங்கவலை

(நமது விசேஷ நிருபர்)

திராவிடத்தின் தமிழ் நாட்டின் திருவிளக்காய் ஒப்பற்ற மாணிக்கமாய் விளங்கிய தன்னலமற்ற வீரத்திலகம் பழயகோட்டை பட்டக்காரரும், காலஞ்சென்ற ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாரின் இளைய [illegible]ரும், உயர்திரு நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியாரின் இளையவரும். ஊத்துக்குழி ஜமீன்தார் அவர்களின் மைத்துனரும் தோழர் வி. சி. சுப்பைய கவுன்டர் அவர்களின் மருமகனும் திராவிடர் கழகத்தின் துணைத்தலைவரும், திராவிடக் கழக நிதிக்கமிட்டித் தலைவரும், கோவைமாவட்ட சாரணியக்க உதவி கமிஷனருமான தோழர். N. அர்ச்சுனன் அவர்கள் சென்ற 12-10-46 காலை 6-மனிக்கு ஈரோட்டிலுள்ள தமது பங்களாவில் இயற்கையெய்தார் என்பதை மனம் ஒடிந்த உள்ளத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



மறைந்த N. அர்ச்சுனன்.

இத்துக்ககரமானச் செய்தி நகரத்தில் ஒரு விநாடிப்பொழுதில் பரவி விட்டது. ஆயிரக் கணக்கில் மக்கள் ஐயோ என அலறித் துடித்துக்கொண்டும் பதறிக்கொண்டும் வந்தனர் இதற்குள், உடல் பழயகோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டது மக்கள் பல்லாயிரக்கணக்கில் காரிலும் பஸ்ஸிலும் போன வண்ணமாகயிருந்தார்கள். கோவை ஜில்லாவின் பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான பிரமுகர்கள், தங்களது கடைசி மரியாதையைச் செலுத்திவிட்டுப் போவதற்காக வந்து கூடினர். அன்று பழயகோட்டை முழுவதும் மக்கள் மயமாகிவிட்டது. உண்மையிலே, மக்கள் கூட்டம் கடல் போலக் காணப்பட்டது. பல திறப்பட்ட மக்கள் ஆண் பெண், சிறுவர் சிறுமிகள் கூடியிருந்தனர். அத்தனைபேரும் அன்று அலறின அலறலை என்றும் மறக்க முடியாது, எவர் மனதை விட்டும் மறையாது. தன் துணைவியார் பிரிந்ததற்கும் ஒரு சொட்டு கண்ணீர் விட்டறியாத திராவிடத் தந்தை பெரியார், அர்ச்சுனன் மறைவைத் தாங்கமாட்டாது அன்று அவரும் அலறினார் என்றால், கண்ணீர் சொரிந்தார் என்றால், எவர் மனம் தான் அன்று கரையாமல் இருந்திருக்க முடியும். [illegible] சிலைய நாட்டில் எங்கும் கண்டிருக்க முடியாது. சரியாக அன்று மாலை 6-மணிக்கு அவரதுஉடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீ மூட்டப்பட்டது.

★ ★ ★

தோழர் அர்சுனன் அவர்கள் அதிக நாட்களாக நோய்வாய்பட்டு கிடக்கவில்லை. ஒரு வாரம் தான் படுக்கையிலிருந்தார். சென்னை டாக்டர் குருசாமி முதலியார், பாலகிருஷ்ணன், கோயமுத்தூர் டாக்டர் ராமசாமி அய்யர், ஈரோடு சர்க்கார் ஆஸ்பத்திரி டாக்டர் லெப்டினன்ட் கர்னல் மேனன், டாக்டர் K. முத்துசாமி ஆகியவர்கள் சிகிச்சை செய்து வந்தார்கள். எவர் என்ன சிகிச்சை செய்தும் இயற்கை அவரது அரும் உயிரைப் பிரித்து விட்டது.

அர்சுனன் அவர்களுக்கு வயது 23 தான் இவ்வளவு இளம் வயதில் திராவிட மக்களின் மனதை கவர்ந்து விட்டார்.

# ★ வீரன் ★

(ப. கண்ணன்)

(சென்ற 9—7—46ல் திருச்சி வானொலி நிலையத்தில் நடைபெற்றது).

## நாடகம்

### பாத்திரங்கள்

| | |
|---|---|
| மாறவன்மன் | மன்னன் |
| இளநாகன் | வீரன் |
| சம்பந்தாண்டார் | இராசகுரு |
| பைங்கிளி | மன்னன் மகள் |
| குமுதவல்லி | குருவின் வளர்ப்புப் பெண் |

1

[அரண்மனையில் மாறவன்மனும் சம்பந்தாண்டாரும் ஆடல் பாடல், கேளிக்கை.]

**பெண்கள்**

மானில வாழ்வினிதே—மலர்ந்திடும்
மாமலர் வண்டு போல் திளைத்திடுவார்க்கு (மா)

மன்னவரானல் இன்னலுமேது?
மாதரும் மதுவும் சாதனைப் பொருளாம் (மா)

இன்பம் இன்பம் என இசைத்திடுபாட்டு
இதனை யடைகுவார் சுகிப்பவர் கேட்டு
துன்பம் வராது தொல்லைகள் ஏது?
துயரம்பொருள் அருளும் தப்பாது (மா)

[illegible] தாண்டார்:—மன்னவா ......[illegible]
உமக்கு சந்தண தாம்பூலம் கொடுப்பதைக் காண, எனக்கு மிக வருத்தம் உண்டாகிறது.

மாறவன்மன்:—என் சுவாமி......?

சம்ப:—பட்டத்தரசியார் மட்டும் ஜீவதசையிலிருந்தால்...... அடடா!...

மாற:—சுவாமி அந்த குலக் கொடியை மறக்கத் தாங்கள் காட்டிய வழிதானே இது!

சம்ப:—ஆம், ஆயினும் இந்தப் பெண்ணின் ஆடல் பாடல், உல்லாசம், உபசரிப்பு, இவைகளுக்கு அத்துணை சக்தி இல்லை.

மாற:—ஒரு வகையில் உண்மைதான்.

சம்ப:—மன்னவா! அந்த மாதரசியை மறக்க மனச்சாந்தி பெற, ஒரே ஒரு மார்க்கம் தானுண்டு.

மாற:—என்ன அது?

சம்ப:—வனப்புமிக்க வனிதாமணி ஒருத்தியை மீண்டும் மணம் புரிந்துகொள்ள வேண்டும்.

மாற:—மணமா?...நானா?...

சம்ப:—ஆம்...அவளைப் பட்டத்தரசியாக்கி அருகே அமர்த்திக் கொள்ள வேண்டும். அவள் மதுமலர், நீ தேனீ! ஆமாம், சுகப்படுவதில் என்ன தடை?

மாற:—சுவாமி! என் மகள் பைங்கிளி, மணப் பருவத்தை யடைந்தவள். அவளுக்கொரு அரச குமாரனைத் தேடி மணம் முடிப்பது என் முதற் கடமையல்லவா? அதுவன்றோ முக்கியம்?

சம்ப:—ஆம். ஆயினும் உமக்கென்று ஒரு குமாரன் இருந்தால் தான், உமக்குப்பின் சந்ததியாக இந்த நாட்டை ஆள முடியும். உரிமைப் பெண்ணின் புதல்வன் வாராளவா போகிறான்? பட்டத்தரசி இல்லாவிடில் அந்த பாக்கியம் சூன்யந்தான்!

மாற:—இருந்தாலும்...

சம்ப:—இதில் யோசனைக்கு என்னவிருக்கிறது? நாட்டு நன்மைக்கில்லாவிடினும், புத்தென்ற நரகத்தினின்று தப்ப, மறு விவாகம் செய்து கொண்ட அரசர்கள் எத்துணைபேர்கள் என்பது நீ அறியாததா?

மாற:—சுவாமி! தங்கள் கட்டளைப்படி நடக்கிறேன்... ஆனல்...

சம்ப:—ஆனல் என்ன?

மாற:—மணந்துகொள்ளத் தகுதி வாய்ந்த பெண் ஒருத்தி... சகல...

சம்ப:—ஆம்! நற்குடியில் பிறந்து, அழகும் குணமும், பருவமும், கலைப்பண்பும் பெற்ற ஓர் பெண் வேண்டும். அவ்வளவுதானே?

மாற:—எனக்கு அம்மாதிரி எல்லாவகையிலும் சிறந்த அரச குமாரிகள் கிடைப்பது அவ்வளவு சுலபம் என்று தோன்றவில்லை.

சம்ப:—என்? கிடைப்பவள் அரச குமாரியாக இருக்கவேண்டும் என்று என்ன வரையறை!

மாற:—ம்...?

சம்ப:—அரச குமாரியைக் காட்டிலும் மேலான குமாரியொருத்தி உமக்காகக் காத்திருக்கிறாள். மன்னவா! மணம் மிகுந்த மல்லிகைக் கொடி உம்மை வரவேற்கக் காத்திருக்கிறது. பூத்து மலர்ந்த நறுமலர். வசந்தப் பொலிவுடன் மிளிர்வது! பிராப்தமிருந்தால்...?

மாற:—யார் சுவாமி அந்தக் குமாரி?

சம்ப:—என் வளர்ப்புப் பெண் குமுதவல்லியை உமக்குத் தெரியாது.

மாற:—யார்? தங்கள் வளர்ப்புப் பெண்ணா?

சம்ப:—ஆம், அவள் புதுப் பருவ மங்கை. அழகுத் தெய்வத்தின் பூர்ண அனுக்ரகம் பெற்றவள். சகல கலாவல்லி, சற்குண சம்பன்னி! அவளையடைய, எத்தனை அரச குமாரர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரி[illegible]

மாற:—(வியந்து) அப்படியா? இத்தனை நாட்களாக என்னிடம் கூறவில்லையே!

சம்ப:—அவசியம் நேரவில்லை. மேலும் குமுதவல்லியின் ஜாதகம் இருக்கிறதே, அது மகா விசேஷமானது அவள் மணாளனுக்கு உலகிலே ஒரு மனக்குறைவுமிருக்காது.

மாற:—(இழுத்ததுபோல்) தங்கள் அன்புக்கு நான்...என்றும் .. கடமைப்பட்டிருக்கிறேன்.

சம்ப:—என் தயக்கம்? மணப்பதில் விருப்பமில்லையா?

மாற:—சுவாமி! திருமணம் செய்து கொள்வதில் தயக்கம் ஒன்றுமில்லை...

சம்ப:—ஆனல்?

மாற:—தங்கள் மகளை மணப்பது பற்றி...சிறிது யோசிக்க வேண்டும்?

சம்ப:—என்ன?

மாற:—தவருகக் கருத வேண்டாம். தயவு செய்து எனக்கு அவகாசம் கொடுங்கள்.

குமுதவல்லி:—(தூரத்தில்) அப்பா!

சம்ப:—குழந்தாய்! என்னம்மா விசேஷம்? உள்ளே வா... மன்னவா! என்ன யோசிக்கிறீர்?

மாற:—உங்கள் வளர்ப்புப் பெண்...இவள்தானே!

சம்ப:—ஆம், நம்மிடையே இவள் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும். அம்மா குமுதவல்லி! என்னம்மா விசேஷம்? இங்கெதற்கு வந்தாய்?

குமுத:—அப்பா! தோழிகள் எல்லாரும் கோவிலுக்குப் போகிறார்கள். நானும் போக...

சம்ப:—காலையில் நீ சொல்லவே இல்லையே.

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க

# கேட்டது கிடைத்தது சொன்னது நடந்ததா?

(தில்லை வில்வலன்)

நண்பன் நாயகம் உள்ளே நுழைந்தான். அவன் செய்திகள் சேர்க்கும் வேலையாக சென்று ஒரு திங்களாயிற்று. தன் கையிலே இருந்த குறிப்பேட்டை நீட்டினான் பெற்றேன். புரட்டினேன். சிறு சிறு துண்டுச் செய்திகள் இருந்தன.

* * *

"மகாத்மாஜி"க்கென தயாராயிருந்த மணிலாப் பயிர்களில் இரண்டு "எண்ணெய்க் கசிவு" கொண்டதாய் இருந்தன.

அந்த "மகானு"க்காக வைத்திருந்த அசல் ஆட்டுப்பாலில், நன்றாக சோப்பால் குளிப்பாட்டி, உலர்ந்த "டவலா"ல் துவட்டிப்பின் கறந்தெடுத்ததும், இரண்டு உரோமங்கள் மிதந்தன.

"பாபுஜீ"க்கு இன்று இராட்டையில் நூற்கும் நூலிழை அடிக்கடி அறுந்தது.

என்ற செய்திகள் அன்றைய தேசிய திருத்தாளொன்றில் வந்திருந்தது. அதை படித்துக் கொண்டிருந்த தியாகி தினகரப் பிள்ளை, உடனே தனது வழக்கமான "தகாடப்பா" குரலில் "பார்த்திங்களா, இந்த வெள்ளைக்காரப் பசங்கள் வேலையை மகாத்மாஜியிடமே வாலாட்ட ஆரம்பிச்சிட்டான்கள்" என்று கூறினார்.

* * *

அலகாபாத்தில் நேற்று "நேருஜீ" பேசிக் கொண்டிருந்தார். மூன்று முறை இருமினார். இருமுறை கனைத்தார். ஒருமுறை தும்மினார்.

பேசிக்கொண்டிருக்கையில் "மைக்" வேலை செய்யவில்லை. விளக்குகள் நின்று விட்டன.

அரை மணி நேரம் சென்றுதான் பேச முடிந்தது. பிறகு அமைதி நிலவியது.

காலைக் காபியை அருந்திக்கொண்டே இச் செய்தியை வாசித்து முடித்த முத்துச்சாமிக் கவுண்டர் "இந்த பிரிட்டிஷ்காரன் தொல்லை பெரிசாப் போச்சு" என்று முண முணத்தார்.

* * *

படேல் வந்த வண்டி பத்து நிமிடம் காலந் தாழ்ந்து பம்பாய் வந்து அடைந்தது

இது "கொட்டையெழுத்து"த் தலைப்பு. அதற்கும் கீழ் "நமது விசேஷ நிருபர்" வண்டிக் காலந்தாழ்த்து வந்தமைக்குக் காரணம், இடையில் ஏற்பட்ட சிறு இயந்திரக் கோளாறு என்று கூறப்பட்டாலும் பின்னர் ஆராய்ந்ததில் "நம்பத் தகுந்த வட்டாரங்களில்" இது வேண்டுமென்றே முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட "பரங்கியர் ஆட்சி"யின் சூது என்று "அதிகார பூர்வமாக" வெளிடாவிட்டாலும், செய்தி உலவுவதாக மட்டும் தெரிகிறது என்று அறிவித்துள்ளார்" என்று இருந்தது.

இதைப் படித்த சுந்தரேச அய்யர் "இதுக்குக் கூடவா கேக்கணும்னே' என்று பக்கமேளம் வாசித்தார் தனது "அம்மாத் தமிழில்"

வேடிக்கையான கற்பனைகள் தான் இவை. ஆனால் உண்மை கலவாதன அல்ல. காலை, மாலை, நானும் நீங்களும் பார்ப்பவை, பார்த்து நகைக்கப்படுவை.

"தேசியம்" அவ்வாறு மனதைப்படுத்தி வைத்துள்ளது. நாட்டில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் விபரீத விளையாட்டு என்பது தான் அவர்கள் வேதாந்தம். ஆகவே எதற்கெடுத்தாலும் வெள்ளையர் மீது "குற்றப் பத்திரம்" வாசிப்பார்கள்.

"அருணா" வீட்டு அடுப்பங்கரையில் "பூனை" யோடியதற்கும், "சரோஜினி தேவி"யின் இல்லத்தின் முற்றத்தில் "சாக்கடை" சரியாக ஓடாமல் நீர் தேங்கி நிற்பதற்கும், "பிரகாசம்" மாளிகையின் மேன் மாடி "அறையில்" காற்று வீசாமல் இருப்பதற்கும், "ருக்மணி இலட்சுமிபதி" வீட்டுக் கூறையில் "பூனையும் எலியும்" சண்டைபோட்டதற்கும் காரணம் வெள்ளைக்கார சர்க்கார் தான் என்று வாதிட்டாலும் நாம் ஆச்சரியப் படுவதிற்கில்லை!

ஆச்சாரியார் தலைவலிக்கும், அவினாசிலிங்கத்தின் ஜுரத்திற்கும், காமராஜரின் கைக்குடைச்சலுக்கும் அடிப்படை "பிரிட்டிஷ் ஆட்சி" என்று கூறினாலும் கூறலாம் தடுத்துரைக்க முடியாது. தடுத்துச் சொல்பவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள்! இல்லாவிட்டால், வெள்ளைக் காரக் கூலிகள்!

நம் நாட்டு விடுதலை விரும்பிகள், தியாகிகள், தேசியத் தீரர்களின் மூளைபலம் அவ்வளவு வளமாக வளர்ந்துவிட்டது.

* * *

ஆகஸ்ட் தியாகி, அக்னித் திராவக வழக்கில் கைதியாகி விடுபட்ட வீரம் சோணாசலம் பிள்ளையும், வைதிக வரதராச நாயுடுவும், காந்தி பக்தர் இராமகிருஷ்ண அய்யரும் சந்தித்தனர்.

"அரிசியோ பத்து எட்டாச்சு, அதுவும் புழுதியும், கல்லும், நெல்லும் கலந்த காராபூந்தி மிக்சர்தான். துணியை நினைத்தாலே பயம். "தீபாவளி" வருது. அது வேறே தொல்லை. வீட்டுத் தொல்லை பிராண அவஸ்தை தான். விறகு கிடைப்பதில்லை. என்னப்பா, இந்தக்காலத்தில் இருப்பதைவிட இறந்துவிடலாம் போலிருக்கு. எங்க காலத்திலே அப்படியா இருந்தது. எப்படி எப்படியோ வாழ்ந்தோம்" என்றார் வயது முதிர்ந்த நாயுடுகாரு.

"எல்லாம் இந்த வெள்ளைக்காரர்களால் தான். நமக்கு ஒரு தேசிய சர்க்கார் வந்துவிட்டால் இப்படியெல்லாம் நடக்குமா?" என்றார் பிள்ளைவாள்.

"என்ன போங்கள். நாயுடுவாள் அவ்வளவு சலிப்பாகச் சொல்லிட்டானே. கண்கண்ட தெய்வம், கலிக்காவதாரம் காந்தி "பகவான்" இருக்கிறபோது நமக்கு பயமென்னு கேக்கிறேன். கவலைப்படாதீங்க; "மகாத்மா" கிருபாகடாட்சத்தால் எல்லாம் சுபேட்சமாய், நிர்விக்கினமாய் நடக்கப்போகிறது" என்றார் காந்திபக்தர்.

"காந்தி சவுக்"குக்குப் பக்கத்தில் "நேரு கபே". அதன் சொந்தக்காரர் சந்திரசேகர அய்யர். நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர். அவர் தோளில் பூணூல் புரண்டு கொண்டிருந்தது.

மூவரும் நுழைந்தனர். காந்திபக்தர் "இதாள்" இடத்துக்கு ஏன் வருகிறார்? "மட்டும்" பக்கத்தில் நுழைந்துவிட்டார். மற்ற இருவரும் "அல்லாதார்" இடத்தில் அமர்ந்து கொண்டனர். தியாகி சோணாசலம் சாப்பிட்டார். மற்ற இருவரும் சிற்றுண்டி எடுத்துக்கொண்டனர்.

இடையிலே பலகை இருந்தாலும் பேச்சு நிற்கவில்லை.

"என்ன பிள்ளைவாள்! இன்னைய பத்திரிக்கையிலே பார்த்தேளோன்னோ. "மகாத்மாஜீ" இராட்டையிலே இராமநர்த்தனம்" கண்டதாகச் சொல்லிருக்கார். சும்மா சொல்லுவாரோ "மகாத்மா"ன்னு என்றார் அய்யர் காபியை ஆற்றிக்கொண்டே.

"நமக்கு வேறன்ன வேணும். இந்த மாதிரியான "மகானே" தலைவராகக் கிடைச்சிட்டார். இந்த "பாக்கியம்" வேறு யாருக்குமே கிடையாது" என்று கூறினார் பிள்ளை.

"மகாத்மான்னா மகாத்மாதான்" என்றார் "கபே" முதலாளி சந்திரசேகரய்யர் பூணூலை ஒருகையால் உருவிக்கொண்டே

"பெரிய மகான்கள். அப்படித்தான்" என்றார் கிழவர் டீயை வாயில் ஊற்றிக் கொண்டே.

"காபிக்குச் சர்க்கரை சரியில்லையென்னே" என்றார் அய்யர்.

"டீயுக்கு 'டிகாக்ஷன்' போதல்லே" என்றார் நாயுடு.

"எல்லாம் ஒரு தேசிய சர்க்கார் இல்லாத குறைதான்" என்று உடனே அப்பேச்சை முடித்தார் சந்திரசேகரய்யர்.

அரிசி வேகவில்லை. அத்துடன் கற்கள். கூட்டில் உப்பு இல்லை. வருவலில் எண்ணெய் இடவில்லை. குழம்பில் காரம் இல்லை. ரசத்தில் புளி குறைவு. மோர் "மொப்பு" அடித்துவிட்டது. இலை கிழிந்திருந்தது. தண்ணீரில் தூசி மயம். இத்தனையும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டு முடித்தார் தோழர் சோணாசலம்.

மறைவிலே இருந்த காந்தி பக்தர் வெளியில் வந்தார். "பில்"லில் மட்டும் ஒன்றாய் உட்கார்ந்து விட்டார். பணம் கொடுக்கையில் மெதுவாக சாப்பிட்டுக் குறைகளைக் கூறினார்.

"உங்களுக்குக் கூடச் சொல்லணுமான் சுதந்திர சர்க்கார் இருந்தால் இப்படி இருக்குமோ?" என்று தனுக்காக அய்யர் கூறினார்.

மூவரும் பிரிந்தனர்.

செந்நாடெங்கும் இத்தகைய பேச்சுகளை, உரையாடல்களை, பிரசங்கங்களை கேட்டுக்கேட்டு அலுத்து விட்டோம். எங்கு திரும்பினாலும், எப்பக்கம் சென்றாலும் நாட்டில் நடமாடும் நானாவிதமான

(இதன் தொடர்ச்சி 6-ம் பார்க்க)

# உதயம்

மலர் 1 20—10—46 இதழ் 12


## அந்தோ மறைந்தார் நம் அர்ச்சுனன்!

திராவிடத்தின் திருவிளக்கு, தமிழ் நாட்டின் ஒப்பற்ற மாணிக்கம்—அரும் பெரும் பொக்கிஷம் கிடைத்தற்கரிய செல்வம் கொங்கு நாட்டு வேந்தன், மக்கள் மனத்தைக் கொள்ளை கொண்ட குறுநில மன்னன், மாநிலம் போற்றும் செம்மல், திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர், பழயகோட்டைப் பட்டக்காரரின் இளையோன் தோழர் அர்ச்சுனன் சென்ற 12—10—46ல் நம்மை விட்டுப் பிரிந்தார். இயற்கை அவரது ஆருயிரைக் களவாடி விட்டது என்ற செய்தி திராவிட நாட்டிலே அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலே பேரதிர்ச்சியை யுண்டுபண்ணிவிட்டது. 'அர்ச்சுனா!' 'அர்ச்சுனா!' என்று மக்கள் கதறுகிறார்கள்; கலங்குகிறார்கள். அவரது ஒளி பொருந்திய கண்களையும், புன்னகை பூத்த முகத்தையும் இனி எப்போ காண்போம் என்று ஏங்குகின்றனர். ஆரிய இருளை அகற்றவந்த மாணிக்கம் மறைந்ததே என்று கருத்தழிந்திருகின்றனர் திராவிட மக்கள். திராவிடம் தோன்றியதிலிருந்து திராவிடர் இயக்கம் தோன்றியதிலிருந்து எவ்வளவோபேர் மறைந்திருப்பார்கள் மறைந்தும் வருகிறார்கள். அப்பொழுதெல்லாம் இதுபோல் கலங்குகின்றனரா? கதறுகிறார்களா? என்றால் இல்லை. பின் ஏன் இப்பொழுது இவரது பிரிவுக்கு இவ்வளவு தூரம் கலங்குகிறார்கள்? என்றால், இவர் அவ்வளவுதூரம் மக்கள் மனத்தை கொள்ளை கொண்டு விட்டார், ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொண்டு விட்டார், கலந்துவிட்டார்.

பெரியார் அவர்கள் அவரை மலைபோல் நம்பியிருந்தார். அண்ணா அவர்கள் அவரை தமது ஆருயிர் தோழனாகக் கருதிவந்தார்; திராவிடம், திராவிடத்தைமீட்கும் சேனைத் தலைவனாகக்கருதி வந்தது. இவ்வளவு எண்ணங்களும் இன்று பொய்யாய் போய்விட்டது என்றால் எவர் மனம்தான் பதறாமல் இருக்க முடியும்?

அவருக்குப் பகையாளி எவரும் இருக்க முடியாதவாறு அவ்வளவு உயர்ந்த முறையில் யாவருடனும் பழகி வந்தார். எத்தகைய எதிரியாயிருந்தாலும் அவரது முகத்தைப்பார்த்தாலே போதும் உயிருள்ளளவும் மறவாத விசுவாசமுள்ள நண்பனாக மாறிவிடுவான். அவ்வளவு சக்தியிருந்தது அவரது பார்வையில்.

அவர் பிறந்த குடும்பத்தின் அந்தஸ்தையும் செல்வ நிலையையும் ஒருவர் எண்ணிப்பார்த்தால்தான் அவர்மக்களோடுபழகிவந்த நேர்மையின் தன்மை விளங்கும். அவரவர்களின் நிலைமையை உள்ளபடி நன்கு அறிந்து அதற்கேற்ப தம்மையும் சரிபடுத்திக்கொண்டு பழகி வருவார். தம்முடைய உயர்ந்த அந்தஸ்து செல்வச் செருக்கு முதலியவைகளைப்பற்றி ஒரு சிறிதும் கருதாமல் யாவரிடமும் தோழமை பூண்டு பழகி வருவார். திராவிடத்தின் இன்றைய நிலைமையையும் அன்றைய நிலைமையையும் நன்கு அறிந்து, திராவிடத்தின் விடுதலைக்கு தம்மை எத்தகைய தியாகத்திற்கும் தகுதியுடையவராக ஆக்கிவந்தார். எந்த நிமிஷத்தில் எந்தப் போராட்டத்திலிறங்க வேண்டுமானாலும் அதிலிறங்கத் தயாராகயிருந்தார்.

அவரது பொது வாழ்வு மிகக் குறுகிய காலந்தான். இதற்குள் அவர் பல மாநாடுகளுக்குத் தலைமைத் தாங்கியிருக்கிறார். திருச்சியில் நடந்த மாகாண மாநாட்டிலும் பங்கெடுத்துவந்தார். பல ஆண்டு விழாக்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார். விவசாயம், கால் நடைகள் வளர்த்தல் முதலிய விஷயங்களிலும் அவருக்கு அளவுகடந்த ஆசை. இவைகளைப்பற்றி இரண்டு ஆண்டுகளுக்குமுன் திருச்சியில் நடைபெற்ற மிராசுதார்கள் மாநாட்டுத் தலைமையுரையில் விளக்கியுள்ளார். ஹிந்து, மெயில், மித்திரன், தினமணி போன்ற எதிர் கட்சித்தாள்களும் பாராட்டும் அளவுக்கு புகழ் பெற்றார். அவ்வளவு அருமையான யோசனைகளை வெளியிட்டார். இதுமட்டுமல்ல, திராவிடம் முன்னேற வேண்டுமானால் திராவிட மக்கள் உலகில் சிறந்துவிளங்க வேண்டுமானால், திராவிடத்திலுள்ள சாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்படவேண்டும்; சாதியின் பெயரால் தொழில் முறை வகுக்கக் கூடாது; அம் முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதுஅவரதுகருத்தாகயிருந்துவந்ததை கோவை மாவட்டமருத்துவர் மாநாட்டுத் தலைமை சொற்பொழிவில் அவர் குறிப்பிட்டிருந்தது ஒன்றே விளக்கும்.

மதுரையில் நடைபெற்ற கருப்புச் சட்டை மாகாண மாநாட்டில் எதிரிகளின் கலவரத்தைக் கண்டு சற்றும் கலங்காது நின்ற அவரது தோற்றமே விளக்கும் அவரது நெஞ்சுறுதியை. அன்று பெரியார் தடுத்திருக்காவிடில் அவரே குதித்திருப்பார் எதிரிகளின் காலித்தனத்தை அடக்க. அவ்வளவு ஆர்வம், நெஞ்சுறுதி படைத்திருந்தார். எஃகு போன்ற உள்ளம் உடையவர் என்றால் அவருக்கே பொருந்தும்.

இராஜ சுகபோகத்தில் தவழ்ந்து இன்பம் அனுபவிக்க வேண்டிய நேரத்தில், திராவிட நாட்டின் விடுதலைக்காக இரவென்றும் பகலென்றும் பனியென்றும் பாராமல் பாடுபட்டு உழைத்து வந்தார். குடும்பத்தைப் பற்றியோ மனைவி மக்களைப் பற்றியோ கவலையில்லாமல் எந்த நேரத்தில் எந்த மாநாட்டுக்கும் கூட்டத்திற்கும் செல்வார். தமது சொந்த நலத்தைக் குறித்து ஒரு சிறிதும் கவலை கொள்ள மாட்டார். பட்டம் பதவியைக் குறித்தோ விளம்பரத்தைக் குறித்தோ புகழைப் பற்றியோ ஒரு சிறிதும் ஆசைப்பட்டவரல்ல. தாம் பிறந்தது மற்றவர்களுக்கு பணிபுரிய என்ற உயர்ந்த பண்பினை கொண்டு வாழ்ந்தார். அத்தகைய உத்தமர் ஒருவரை திராவிடம் இழந்துவிட்டதென்றால், திராவிட மக்கள் பறி

கொடுக்க நேர்ந்த தென்றால் எவர் மனம்தான் பதறாமலிருக்க முடியும்?

கிடைத்தற்கரிய பொக்கிஷம் விலை மதிக்க முடியாத மாணிக்கம் கிடைத்தது. இதன் ஒளியில் பெரியாரின் வழியில் அண்ணாவின் தலைமையில் ஆரிய இருளை அகற்றி விடலாம் என்று அளவில்லா ஆசை கொண்டிருந்தது திராவிடம். பெத்தாம் பாளையம் பழனிச் சாமியால் கண்டு பிடிக்கப்பட்டு அண்ணாவால் ஒளிபெறச் செய்து, பெரியார் அவர்களால் பாதுகாக்கப் பட்டு வந்த மாணிக்கம் மறைந்தது என்றால், எவர் மனம்தான் கலங்காமலிருக்க முடியும்? அவரின் வீரத்தைப் புகழை ஏந்திச்செல்ல இருந்த ஏடுகள், எழுத இருந்த பேனாக்கள் அவரது மறைவுச் செய்தியை ஏந்திச் செல்லவும் எழுதவும் நேர்ந்த தென்றால் இதைக்கண்ணுறும் எவர் தான் கண்ணீர் விடாமலிருக்க முடியும்?

இவ்வளவு அருங்குணங்களமைந்த ஒருவரை திராவிடம் என்று காணுமோ நாம் அறியோம். ஏனெனில், இவ்வளவு நற்குணங்கள் அமையப் பெற்றவரும் அன்பே உருவாயமைந்தவரும் காண்பது அரிதினும் அரிது என்பதே நமது கருத்தாகும். ஆனால், இவரது மறைவு அவரது குடும்பத்தாரைவிட திராவிட நாட்டுக்கு பெரும் நஷ்டமாகும். ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அவரது குடும்பத்தார் எவ்வளவு தூரம் வருந்துகிறார்களோ அவ்வளவு தூரம் திராவிட மக்களும் இன்று வருந்துகிறார்கள், பதறுகிறார்கள். எனவே, யார் யாருக்கு ஆறுதல் சொல்வது யார் யாருக்கு அனுதாபம் தெரிவிப்பது? ஒவ்வொருவரும் அவரவர்களே மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறோம் என்றாலும், தந்தையை இழந்த அதிர்ச்சியே இன்னும் நீங்காத நிலையிலிருக்கையில், தமது ஒரே தம்பியும் தம்மைத் தனியே விட்டுப் பிரிந்தார் என்றால் இவ்வதிர்ச்சி உள்ளபடியே உயர்திரு நல்ல சேனாதிபதி மன்றாடியார் அவர்களுக்கு தாங்க முடியாத துக்கத்தைத் தரக்கூடியது தான் என்பதை யாம் அறிவோம். இருந்த போதிலும், தமது தம்பியை இவ்வளவு தூரம் நேசித்த மக்கள் நம்மையும் நேசிப்பார்கள் தம்பி நேசித்து வந்ததுபோல் நாமும் நேசித்து வருவோம் என்ற நம்பிக்கையிருக்குமானால், மணி விளக்கு மறைந்து விட்டதே என்ற கவலை மனத்தையும் விட்டகலும் என்றே கருதுகின்றோம்.

கடைசியாக யாவருக்கும் ஒரு ஆறுதல் இருக்கிறது. அதாவது

"தோன்றின் புகழொடு
தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று."

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்காக விளங்கினார் நமது அர்ச்சுனன் என்று மனம் ஆறுதல் கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

## சென்னை மாகாண நெசவுத்தொழில்
# பாதுகாப்பு மாநாடு

சென்னை, செண்ட் மேரிஸ் ஹாலில்

**5—11—46ல் நடைபெறும்.**

தலைவர்:—**முன்னாளமைச்சர் S. முத்தைய முதலியார்**

வரவேற்பாளர்:—காஞ்சிபுரம் அ. க. தங்கவேலர், ஜனாப் அப்துல் மஜீத் M. L. A., திறப்பு விழாவாற்ற அழைக்கப் பட்டிருக்கிறார்.

நெசவுத்தொழிலில் சம்பந்தப்பட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வார்கள்.

## ஒழிக்கப்பட வேண்டும்

ஆங்கிலம் இந்நாட்டின் அரசியல் மொழியாக ஏற்பட்டதிலிருந்து ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் ஏற்பட்டதுடன், மக்களும் அம்மொழியிலே மோகம் கொள்ளவுமானார்கள். ஆங்கிலம் வந்து தமிழ்மொழி வளர்ச்சியை வெகுவாக பாதித்துவிட்டது. கடந்த சிலவாண்டுகளாகத் தான் தமிழ் மொழிக் கிளர்ச்சி துவக்கப்பட்டு ஓரளவுக்கு தமிழ்மொழியின் மீது மக்கள் பற்று கொள்ளவும் தமிழ் மொழி நூலைத்தவிர இதர மொழி நூலைக் கையில் கொண்டு செல்லுதலே இழிவு என ஒரு தமிழன் நினைக்கவுமான காலம் ஏற்பட்டுள்ளது. அதற்குள் வேறொரு மொழியை அரசியல் மொழியாகப் புகுத்த எண்ணுவதோ அம்மொழியின்மீது மக்களுக்கு மோகம் பிறக்குமாறு செய்வதோ இன்று தமிழ் மொழிக் கிளர்ச்சியை மறைமுகமாக அடக்க முயல்வதேயாகும். இதற்கு இடம் கொடுக்கலாமா என்பதுதான் தமிழ் மகன் முன்னுள்ள முதல் பிரச்சினையாகும். உண்மைத் தமிழ் மகன் எவனும் இத்தகைய மனப்பான்மையை ஒழிக்காமல் தூங்கமாட்டான் என்றே நம்புகின்றோம்.

இந்தி மொழியை அரசியல் மொழியாகப் புகுத்த யோசித்து வருகிறார்கள். அரசியல் மொழியாக இந்தி புகுத்தப்பட்டு விட்டால், மக்கள் மனம் இந்தி மொழியில் தான் செல்லுமேயல்லாது தாய்மொழி வளர்ச்சியில் செல்லுமா? மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும்போது அந்தந்த மாகாணத்தின் அரசியல் மொழியாக விளங்கப்போகையில் இந்தி அரசியல் மொழியாகப் போகிறது, அதைப்படிக்க ஒவ்வொருவரும் முன் வரவேண்டுமென்று கூறுவது நேர்மையாகுமா?

தமிழ்நாடு—திராவிட நாடு தனி நாடாகப் பிரிக்கப்படாதவரை, இந்திய யூனியனுக்கும் திராவிட நாட்டுக்கும் எந்தவித பிணைப்புமில்லாத நிலைமை ஏற்படாதவரை, தமிழ் மொழி, தமிழர் நாகரிகம், தமிழர் பொருளாதார நிலை முதலியவைகள் பாதுகாக்கப்படவோ முன்னேற்றமடையவோ முடியாது என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் கவனத்தில் வைக்க வேண்டும்.

எனவே, இந்தியா ஒன்று, திராவிடநாடு—தமிழ் நாடு அதில் ஒரு பாகம் என்ற மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டியதுடன், வடநாட்டுக்கு அடிமைப்படுத்தும் காரியங்களை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையும் தமிழ் மகனுடையது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## நெல்லை மாவட்ட தோழர்களுக்கு

திராவிட வீரனைக்கொன்ற தினம் தீபாவளிப் பண்டிகை. அப்பண்டிகையில் ஆனந்தப்படுபவன் ஆரியனே ஒழிய திராவிடனல்ல உண்மையாகவே திராவிடர்கள் அனைவரும் தீபாவளி துக்க சாகரத்தில் மூழ்கி இருக்க வேண்டியது. ஆகவே தான் அன்றையதினம் நெல்லை மாவட்ட திராவிடர் கழகத் தோழர்கள் அனைவரும் கருப்புச்சட்டை அணியும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**கே. வி. கே. சாமி,**
செயலாளன்,
நெல்லை மாவட்ட திராவிடர் கழகம்.

## கேட்டது கிடைத்தது சொன்னது நடந்ததா?

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

நலிவுகளுக்கும் வெள்ளை அரசாங்கமும், அதன் வஞ்சனைத் திட்டங்களும் தான் காரணம் என்று நமது காங்கிரஸ் அன்பர்கள் கூறிவந்தனர்.

கூறியதிலே நமக்கு வெறுப்பு இல்லை. மக்கள் நம்பியதிலேகூட அவ்வளவு அக்கரைப்படவில்லை. மனச்சாந்தியத்திற்கு மார்க்கம் என்று விட்டுவிட்டோம். அதனால் எவர் மீதும் வெகுளியும் கிடையாது; நம் தோழர்கள் சிந்திக்கவில்லையே என்ற விசனந்தான்!

★ ★ ★

கேட்டது கிடைத்துவிட்டது. இல்லாவிட்டால் "கல்கி" படந்தீட்டுமா பண்டிதருக்கு பாங்கி முடிசூட்டுவதாக! கிடைத்ததா, கிடைக்கவில்லையா என்பதே சிந்தனைக்குரியது என்பது நமது முடிவு. அப்படிக்கிடைத்திருந்தாலும் கீழே குழி தோண்டப்பட்டுள்ளது என்பதை காணுங்கள் என்பது நமது உபதேசம். இருந்தாலும், அவர்கள் கூறுகிறபடி கேட்டது வந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம்.

"பாரத தேவியி"ன் தவப்புதல்வர் "பண்டிதர்" தலைமையில் "சர்க்கார்" தொடங்கிவிட்டது. காந்தி "மகானின்" ஆசிபெற்றது. "சுதந்திர துரோகிகள்" இடம் பெருதது.

"சத்தியம்" செய்தனர். "தர்பார்" செய்கின்றனர். ஆனால் இதன் தலைவர் வைஸ்ராய் வேவலேதான். முக்கிய மூன்று பொறுப்புகள், அதிகாரங்கள் அவர்களின் கையில் இருந்தாலும் சுதந்திர சூரியன் உதித்துவிட்டது என்கிறார்கள். இது நிரந்தரமானதும் இல்லை. இன்றோ, நாளையோ கலையலாம். கலைக்கப்படலாம். லீக் இன்று விரும்பினால் சேரலாம். (லீக் சேர்ந்து விட்டது,)

★ ★ ★

இரண்டு வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறிவிட்டேன். கேட்டது கிடைத்தது! என்று தேசியத் திரு ஏடுகள் நம்மீது பாயலாம். ஏன்?

தேசிய சர்க்கார் முன்னுள்ள பிரச்சினைகளின் கோரத் தன்மையைப் பற்றி நினைக்கும்போது தலைவர்கள், இந்தப் பதவி ஏற்பதன் மூலம் மீண்டுமொரு முறை தியாகத்தீயிலேயே குதித்திருக்கிறார்கள்.

—ஆனந்தவிகடன்

சென்ற செப்டம்பர் 2ந் தேதி காலையில் வழக்கம்போல் கிழக்குத்திசையில் உதித்த சூரியன் உதயமாகும்போது கவனித்தவர்கள் ஒரு புதிய பளபளப்பையும், பரபரப்பையும் கண்டிருப்பார்கள். அன்று காலை உதயமாகும் விஷயத்தில் சூரியன் கொஞ்சம் அவசரப்பட்டுக் கடிகாரத்தைத் திருப்பி வைத்திருக்கலாமோ என்று கூறச் சொல்லலாம்.

அன்று சூரியன் வழக்கத்தைவிட அதிக பிரகாசம் கொண்டிருந்ததற்கும் அவசரப்பட்டதற்கும் தக்க காரணம் இருந்தது. இரண்டாயிரம் வருடமாக இந்த பாரத தேசத்தில் காணாத காட்சியைக் காணப் போகிறோம் என்ற எண்ணந்தான் காரணம். இமய மலையிலிருந்து கன்னியா குமரி வரையில் இந்தியா தேசம் ஒரே சுதந்திர ராஜ்யமாகக் காட்சியளிக்கப் போகிறது என்ற ஆவலே காரணம்.

கடைசியாக செப்டம்பர் 2ல் அந்த "உலகத்துக்கொரு புதுமை" நடந்தே நடந்து விட்டது. பண்டித ஜவஹர்லாலும், அவரது சகாக்களும் புது டெல்லி அரசாங்க மாளிகை சென்றார்கள். வைஸ்ராய் வேவலிடமிருந்து இந்திய அரசாங்கத்தின் பூரணப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள்.

கல்கி

செப்டம்பர் 2-ந் தேதி ஒரு சுபதினம்.

ஹனுமான்

தேசிய சர்க்காரை வரவேற்கிறோம்.

ஆனந்தபோதினி

என்று பல பல முறைகளில் இந்த நாட்டு ஏடுகள் எழுதின. வரவேற்றன. வாழ்த்துக் கூறின. தினசரி, தினமணி, சுதேசமித்திரன், எல்லாம் ஒரு முகமாய் போற்றின. எல்லா வகை சஞ்சிகைகளும் அப்படித்தான் எழுதி பூரித்தன.

★ ★ ★

இவர்கள் செய்கிற ஆர்ப்பாட்டங்களைப் பார்த்தால் நமக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஒருவர் சுதந்திர சர்க்கார் வந்துவிட்டது என்கிறார். இன்னொருவர் இடைக்காலந்தானே என்கிறார். வெள்ளைக்காரன் வெளியேற மூட்டை கட்டியாச்சு, டிக்கட் வாங்க வேண்டியதுதான் பாக்கி என்கிறார் அவசரக்கார நண்பர். இப்பொழுது அதுகூட பெரிய பிரச்சினையில்லை, கடல் மார்க்கமாய் கப்பலில் போகலாமா, தரைமார்க்கமாக கைபர், போலன் கணவாய் வழியாகப் போகலாமா என்பதுதான் யோசனை என்கிறார் ஆராய்ச்சிக்காரத் தோழர். அவர்களுக்குள்ளே ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. சுதந்திரத்தின் முதல் படி என்பவருக்கு சுதந்திரத்தின் எல்லையே அடைந்து விட்டாயிற்று என்று வேறொரு தோழர் இடித்துக் கூறுகிறார்.

நமது தேசியக் கல்லார் கூவுகிறார் "நமது தேகம் உலகினுக்கு நாகரீகம் காட்டவே" என்று.

நாகரீகம் என்பது என்ன? அதற்கு இலக்கணம் யாது? நாகரீகத்தின் கதையைக் கூற விரும்பினால் அதில் இடம் பெறுவது மனித தேவைகளின் வளர்ச்சியும், அதற்கான மனித முயற்சிகளின் மாற்றங்களுமேயாகும்.

மனிதன் ஒரு காலத்தில் கிழங்குகளையும், கீரைகளையும் உண்டான். ஆனால் அது மாறி மாறி இன்று "குலோப்ஜானாகவும்," டில்லி பாதுஷாவாகவும் உருப் பெருகின்றன. உணவிலே அவ்வளவு வளர்ச்சி!

---

தேவை! தேவை!!

எங்கும் புகழ்பெற்ற

**N. K. P. வேல் டைரக்ஷன் ஆயில் அண்டு சோப்**

விற்பனை செய்ய

# ஏஜண்டுகள் தேவை!!!

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது. இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள்

**தீர்க்கலாம்**

சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாவிஷாகவும் இருக்கும். எவ்வித பரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விபரத்திற்கு எழுதவும்.

**இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள்**

விலாசம்:—

**செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,**

திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

---

## திருமண அழைப்பு

1—11—46 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு எனது மகள் திருநிறைசெல்வி **சுசீலாவுக்கும்** சேலம் கச்சிபாளையம் தோழர் ரங்கசாமி அவர்களின் மகன் திருநிறைசெல்வன் **R. நாராயணசாமிக்கும்** மணமகன் இல்லத்தில் நடக்க இருக்கும் திருமண விழாவிற்கு இயக்க அன்பர்கள் இதனையே அழைப்பெனக் கொண்டு வருகை தந்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**K. K. நாயுடு.**

2-ம் பக்கம் தொடர்ச்சி

## வீரன்

குமுத :—போக எற்பாடாகி இருப்பது இப்பொழுதுதான் தெரிந்தது. ஓடிவந்தேன்.

சம்ப :—போய் வாம்மா. பல்லக்கில் பத்திரமாகச் சென்று திரும்ப வேண்டும்.

குமுத :—உத்திரவு அப்பா. (குமுதவல்லி போகிறாள்)

சம்ப :—(தாமதித்து) என்ன யோசனை?

மாற :—ஒன்றுமில்லை. என் மண விஷயந்தான்.

சம்ப :—(சிரித்து) மண விஷயத்தைப் பற்றி ஒருவர் எடுத்துச் சொன்ன பிறகு, அதைச் சிந்திக்கும் ஒரு மன்னவனை இன்றுதான் பார்க்கிறேன்.. ம் ..நன்றாகச் சிந்தனைச் செய்யும், நானும் சென்று வருகிறேன்.

மாற :—நல்லது.

சம்ப :—(தூரத்தில்) ஆனால் உமது முடிவு மங்களகரமாகவே இருக்கட்டும்.

2

[பல்லக்கும் போகிறது—திடீரென்று மதயானை பிளிறிக்கொண்டு வருகிறது.]

பைங்கிளி :—தோழி!...இளமதி.. இதென்ன சப்தம்?
இளமதி :—என்ன ஆ! யானை! பிளிறிக்கொண்டு வருகிறதே!

பைங் :— என்ன?

இள :— அரண்மனை யானைகளில் ஒன்று மதத்துடன் கண் மண் தெரியாமல் ஓடி வருகிறதே! ஊ!...ஐயோ! பல்லக்கு வெளியே பார்!

பைங் :— என்ன? ஜனங்கள் எல்லோரும் சின்னா பின்னமாகி நாலா பக்கமும் ஓடுகிறார்களே!

இள :— பைங்கிளி! இதென்ன? பல்லக்குத் தூக்கிகள் நம் பல்லக்கை வைத்து விட்டு உயிருக்குப் பயந்து... ஐயோ!

பைங் :—ஆ!...இதோ பார்...—நம் பல்லக்கை நோக்கி யானை வருகிறதே! வந்துவிட்டதே! ஆ!...

(யானை பிளிறுகிறது, பின்னர்—திடீரென்று ஒரேயடியாகக் கத்திக்கொண்டு அப்பால் ஓடுகிறது—இளநாகன் ஈட்டியால் விரட்டுகிறான்)

இருவரும் :—ஆ!...பிழைத்தோம்...

இளநாகன் :—பாவம், இருவரும் பயத்தால் மூர்ச்சையாகி விட்டார்களே!

பைங் :— (மெல்லியக் குரலில்) நான் எங்கிருக்கிறேன்?

இளநாகன் :—தேவி! பயப்படவேண்டாம்- எதிர்த்து வந்த யானை என் ஈட்டிக்குப் பயந்து ஓடிவிட்டது.

பைங் :— உண்மைதானா?

இளநா :—ஆம். உண்மையில் ஆபத்து விலகிவிட்டது. (சினத்தோடு) கோழைகள்! மதயானைக்கு மங்கையைப் பலியிடத் துணிந்த மடையர்கள்!

இளமதி:—நல்ல வேளை நீங்கள் வந்தீர்கள்...

பைங் :—தாங்கள் தைரியத்துடன் யானையை விரட்ட முன் வந்திராவிட்டால்......?

இளமதி :—நம் நிலைமை என்னவாகி இருக்கும்?...(பெருமூச்சு) அப்பா, பிழைத்தேன்!

பைங் :— யானை எங்கே?

இளநா :—யானை போய்விட்டது, மிகவும் பயந்து விட்டீர்களோ

பைங் — ஆம், ஐயா! இந்த உதவியை என்றும் மறவேன்.

இளநா :—சமயத்தில் இந்தச் சிறு உதவியையும் செய்யாவிட்டால், மனிதனாகப் பிறந்தது தான் என்ன பயன்?

பைங் :— சிறு உதவியா? மகத்தான உதவி!......ம்......என் உயிரை எனக்கு மீட்டளித்த தங்களை, யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?

இளநா :—இளவரசி! இந்த நாட்டின் சாதாரண போர்வீரர்களில் அடியேனும் ஒருவன்- பெயர் இளநாகன்!

பைங் :— (வியந்து) இளநாகன்! அதுவா? நாட்டுப் போரில் படைத்தலைமை பூண்டு, வெற்றி மாலைச் சூடியவரா?

இளநா :—ஆம்.

பைங் :— அந்தப் போரில் தங்கள் வீரப்பிரதாபங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு, நான் எவ்வளவு வியந்தேன் தெரியுமா?

இளநா :—ஏன், இப்பொழுது அதற்கு மாறாக நான் காட்சி அளிக்கிறேனா?

பைங் :— ஐயோ...இது என்ன வார்த்தை? உங்களுக்கு எவ்வகையில் நன்றி செலுத்தப் போகிறேன் என்றறியாமல் நான் தவிக்கும்போது......

இளநா :—நான் உத்தரவு பெற்றுக் கொள்ளலாமா?

பைங் :— வீரரே! அடியாளின் வேண்டுகோள் ஒன்று.

இளநா :—வேண்டுகோள் என்? கட்டளையிடுங்கள் தேவி.

பைங் :— மன்னிக்க வேண்டும். தங்கள் துணிகரமான வீரச் செயல்களும், களங்கமற்ற கடமைபுணர்ச்சியும், அதே சமயத்தில் அன்பொழுகும் பேச்சும், தங்கள் கம்பீரமான தோற்றமும் என்னை ஆட்கொண்டு விட்டன. தயவு செய்து மீண்டும் ஒரு முறை தங்களைச் சந்திக்க எனக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

இளநா :—(சிரித்து) என்னைச் சந்திக்கவா?

பைங் :— ஆம்......

இள :— விநோதமான வேண்டுகோள். அதோ பயந்தோடிய பல்லக்குத் தூக்கிகள் வந்துவிட்டனர். இளவரசி! ... விரைவில் சந்திப்போம், சென்று வாருங்கள்.

பைங் :— (மெதுவாக) [illegible] ஆண்மகன்—— இளமதி! என்ன நீ இங்குதானிருக்கிறாயோ?

இள :— ஆம், இருக்கும் குறைவான நேரத்தில்... நான் வேறு குறுக்கிட்டு...

பைங் :— உனக்கு எதுவும் விளையாட்டுத்தான்.

இளமதி:—ஒரு குறை தீர்ந்தது! .. நீயும் உனக்காகப் படைக்கப்பட்டவர் எங்கோ என்றறியாமல்...

பைங் :— இளமதி!...உன் பரிகாசம் வரையற்றுப்போகிறது...

இளமதி:—துன்பத்திலும் இன்பம் என்பது இதுதான் போலும். அந்த யானை அப்படி ஓடி வந்திரா விட்டால்...இந்த ...

பைங் :— போதும் போதும் நிறுத்து!... (பல்லக்கு போகிறது)

(3)

[மன்னன் மாறவன்மனும் இராசகுரு சம்பந்தாண்டாரும் கேளிக்கையில் நடனமும், இசையும் ஓய்கிறது]

மாறவன்மன் :—சுவாமி! இந்த அழகு மடந்தையின் கோகில கானம், அரிய நடனம், மலர்க்கரம் தந்த மது, இவற்றில் தோய்ந்து தோய்ந்து ஓய்ந்துபோய் விட்டேன்.

சம்பந்தாண்டார் :—ஆசைக்கும் இன்பத்திற்கும் ஓய்வென்பதேது? மன்னவா! காவியம், சிற்பம், சித்திரம் சிங்காரம், இசை, நாட்டியம் எல்லாம் மன்னர்களின் இன்பங்களுக்காகவே படைக்கப்பட்டன... அவைகளை அனுபவிக்கவே மன்னவர்...

மாற :— சலிப்படைந்து விட்டால்?

சம் :— மகேஸ்வரன் மாற்று மருந்தையும் படைத்திருக்கிறான். அதுதான் படைப்பின் அற்புதம்.

மாற :— என்ன மருந்து சுவாமி?

(தொடரும்)

# சரித்திரச் சாரலிலே

(ஏகாம்பரம், வேலூர்.)

மழையில்லை; காய்ந்து கிடக்கும் கானல் கட்டுடலைச்சுட்டெரித்தது. தேங்கிக்கிடக்கும் நீர் பாய்ச்ச நேர்மையாளரில்லை. வாழ்வு வரண்டு, தாழ்ந்தோனாய், பணிவோனாய்க் காலங்கழிகிறது. சாரலிலே சிதறிய சிறுதளி என் உணர்ச்சியைத் தொட்டிழுத்தது. எட்டிப் பார்த்தேன். சிதறும் ஒவ்வொரு துளியும் சரித்திரச் சாரலிலே எனக்கண்டேன். ஒவ்வொரு துளியும் கீழ்கண்ட வாலாற்றைத் தந்தன.

ஆடு மாடுகள் மேய்த்து, ஆரியர்போன்று அலைந்து திரிந்து, பாலஸ்தீனத்திலே புகுந்து, பாபிலோனிலே பணிந்தவர் யூதர். தன் இன இறுமாப்பும், மனிதரிலேயே உயர்ந்த பிறவி என்ற கருத்தும், அவர்களைத் திதஸ் (Titus) முதலிய அரசர்களால் துரத்தப்பட்டும், இரக்கமின்றி கொல்லவும் வைத்தன. உலகிலே காணப்படும் யூதர் எண்ணிக்கையைப் போல் பன்மடங்கு இன இறுமாப்பு இரத்தம் ஒவ்வொரு யூதர் உடலிலும் ஓடுகின்றது. ஆடை, அணிகலன், ஆண்டு, மொழி, உணவு இன்ன பிறவற்றால் அனைவரினும் மாறுபட்டவர்கள் இவர்கள் தங்கள் வஞ்சக வாழ்விற்குத் தடை சிறிது எற்படும் என்று எண்ணின், எவ்வித செயலும் செய்யத் தயங்கினதில்லை.

மிதினாவிலே மகமத் எல்லினாரயும் மெக்கா மக்களின் படையெடுப்பை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். தக்கதோர் தருணம் வாய்க்கவே, உடன்படிக்கையை உடைத்தெறிந்து, யூதர்கள் மெக்கா மக்களுடன் கூடி மகமதை எதிர்த்துத் தோற் [illegible] யூத ஆண்களனைவரும் கொல்லப்பட்டனர். இவர்கள் கிறித்துவமதம் தோன்றிய காலத்தும் இழைத்த இன்னல்கள் எண்ணிறந்தன. யூதர் என்ற பதத்திற்கே உலோபி, நீசெறியிலே பொருள் சேர்ப்போர், வாழ்வோர் என்ற பொருள் ஆங்கில அகராதி கூறுகிறது. உழைக்காது உல்லாசிகளாக உயர்ந்தோராக வந்தனர் யூதர்கள். உல்லாசவாழ்விற்கு ஊறு சிறிது நேரிடுவது காணினும் மனம் பொறார்; எச்செயல் செய்யவும் தயங்கார்.

1582லே ஆரியம் இங்கு அரசோச்சுகிறது. மத மாற்றம் காரணமாக, மக்களிலே மாறுபாடு காணாத அக்பர் அரசாண்டு வருகிறார் டில்லியிலே. இங்கிலாந்திலே, ஒரே மதத்திலே சில பிணங்கிய கருத்திற்காக, ஸ்காட்லந்து, கத்தோலிக்கரைக் கொளுத்தியும், தன்புறுத்தியும் அரசாண்டு கொண்டிருக்கிறார். எலிசபெத் அம்மையார் எலிசபெத்தின் முறிச்சீட்டு பெற்று, வாணிபத்திற்கு மார்கட்வேண்டி ரால்ப பிட்ச் (Falph Fitch) என்பவர் அக்பரிடம் வருகிறார். அவர் இங்கிருந்த ஆரியர் ஆணவ அட்டகாசங்களைக் கண்டு கூறுகிறார் "யூதரினும் கொடுமையான மோசமான மக்கள் ஆரியர்" என்று. இவர் கூற்றுக்கு இந்திய வரலாறு வழி வகுக்கிறது.

பாரதகால முதல் பாஷ்யம் அய்யங்கார் காலம் வரை வால்மீகி காலமுதல் வேவல் காலம் வரை மனுதர்மம் மாற்றம் பெற்ற பாடில்லை. பதினேழு முறை படையெடுத்து க்ஷத்திரியரை வென்றதாக பாரதம் கூறுகிறது. இராமனின் சம்புகவதம் ஆரியருக்கு ஆளுகை எற்பட்ட ஆட்சி, என்பதற்கு எடுத்துக்காட்டு கண்ணன் காட்டிய வழி கீதை. கீதை கூறுவது. "நான்கு வருணம், பிராமணனுக்குக் கொடுக்காமல் புசிப்பவன் திருடன், சாதிக் கலப்பை யகற்று' என்பன. ஆசோகர் சமநீதி வழங்கும் சட்டம் அமைக்கக் குழு ஒன்றேற்படுத்தினார்; கொல்லாமையை வற்புறுத்தினார்; புத்தமதம் பரவ ஆரம்பித்தது. ஆரியரின் உச்சிக்குடுமியை அறுத்திடவே தாங்க முடியாத தண்டனையாக இருந்த இவர்கள் இந்நிலையை எங்ஙனம் எற்கமுடியும். எனவே புஷ்யமித்திரனைத் தூண்டி அசோக ஆட்சியை அழித்து ஆரிய ஆட்சி அமைத்தனர். புஷ்யமித்திரன் அரியணை எறியதும் அசுவமேதம் நிகழ்த்தியது. இதனை வலியுறுத்துவதாகும். சாரதத்தன் என்ற பிராமணனுக்குத் திருட்டுக்குற்றத்திற்காக வழங்கிய கொலை தண்டனை, நிறைவேற்றப்படாது, அரசனையே நீக்கி அவனையே அரசனாக்கிற்று. ஹர்ஷர் புத்தமதத்தைப் பின்பற்றுகிறார்; என்றதனால் அவர் மாளிகைக்குத் தீ மூட்டத் துணிந்தனர், இவ்வாரியர். ஜைன மதம் தோன்றிய காலத்தும் ஆரியஎதிர்ப்பு நீங்கியபாடில்லை. சம்பந்தரும், குலச்சிறையும், சமணரைக் கழுவிலேற்றிய காட்சி கோவில் பிரகாரங்களை அலங்கரிக்கின்றன. வேதத்தின் வார்த்தைக்குப் பொருள் வினவிய குற்றத்திற்காக கழுத்துவரை கழுவாணி காட்ட, சிம்மாசனம் ஆசாரிய ஆரியனனுக்கே அமர இடம் தந்தது திருமலை நாய்க்கர் ஆட்சியிலே. பின்னர், திராவிட நாகரிகத்தைத் தகர்த்தெறியவே சைவமும், வைணவமும் ஆரியரால் எற் [illegible] கூறுகிறார். பின் வந்த கிளைவுக்கு ஹேராமிசந்த், விக்ரமாதித்யனுக்குப் டட்டி, சிவாஜிக்கு ஸமிர்த் ராமதாஸ், எனப் பலர். அபுடுபாய், சாண்டர்ஸ், விவேகானந்தர், தாகூர், சி. வி. ராமன், சுப்பிரமணியம் பிள்ளை எனப் பலர் ஆரியத்தைக் கடிந்தனர். என்றாலும் வைதீக வித்திற்கு வருணாசிரம உரம் வளமாக்கிக் கொண்டு வருகிறது.

பைசா நகரக் கோபுரம் பேசினால் கூறும்: மத்திமை யீழுப்பை விளக்கும் பொருள் என்னும் காளலோவையும் கரிபால்டையும் தந்தேன் என்று. நான்கிங் கோபுரம் கன்யாட்சனைத் தந்தேன் என்று சொல்லும். வெஸ்ட்மினிஸ்டர் அபே (Westminister Abbey) சார்லியின் சிரத்தை நீக்கி, ஜேம்சைத் துரத்தி சமபிறப்புரிமையைக் காட்டினேன் என்று கழறும். மாஸ்கோ கோபுரம், புரட்சி பூத்து, புதுமை விளைந்து, சமத்துவம் சிறந்து தன் மானம் தழைத்தது என்று கூறும். மதுரை மீனாட்சியம்மன் கோபுரம் எட்டாயிரத்திற்கு மேற்பட்ட சமணரைக் கழுவேற்றினேன் என்றுதான் சாற்றமுடியும். இங்குப் பழமையைப் பறைசாற்ற கோபுரங்கள் உண்டேயொழிய புதுமை காண வழியில்லை. இந்நிலையிலே மாற்றம் காணேன்? ஆரியம் அங்கே யூதர் பிடியை யுணர மக்கள் இருந்தனர்; மார்க்கம் இருந்தது. இங்கே பெரியாரின் பெருமுயற்சி ஆரியத்தை அசையவைக்கின்றமை காண வைதீகத்தின் வேவல், வருணாசிரமத்தின் வட்சனே, பழமை விரும்பியெனும் பாம்பு, சைவத்தின் சலசலப்பு, வைணவத்தின் வேகம் சூழ்ந்து கிடக்கின்றன.

# சக்தி நாடக சபா முகாம் முடிவு

## பாரதிதாசன் தலைமையில் கூட்டம்

திண்டுக்கல் சோலை ஹாலில் நடைபெற்ற சக்தி நாடக சபையாரின் முகாம் முடிவு விழா 24—9—46 செவ்வாய் இரவு 9—30 மணிக்கு "கவியின் கனவு" நாடகம் நடக்கப்பெற்று கொண்டாடப்பட்டது. அதுபோது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். 'கவியின் கனவு' நாடகம் முடிந்தது. சபைத்தலைவர் தோழர் டி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் கவிஞரை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். பின் கவியரசர் தலைமையுரையில் பேசுகையில் 'என்னை பன்முறை இக்கம்பெனியார் அழைத்தும் வர இயலாமல் போனதற்கு வருந்துகின்றேன். இக்கம்பெனி ஆரம்பித்து சுமார் மூன்று ஆண்டுகள் இருக்குமென எண்ணுகின்றேன். ஆனல், இன்றுதான் இவர்கள் நாடகத்தைகாண வாய்ப்புகிடைத்தது. இன்று இவர்கள் நாடகத்தை கண்டதும் மற்ற நாட்களை வீணாக்கழித்து விட்டோமே என்றுதான் வருந்துகின்றேன். ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போன்று, அறிஞர் கிருஷ்ணசாமியின் திறமை இதன் மூலம் நன்கு விளங்குகின்றது. கலையில் புரட்சி யுண்டாக்கியுள்ளார் அறிஞர் கிருஷ்ணசாமி. மற்றும் நடிகர்கள் உணர்ச்சியுடனும் பாவத்துடனும் நடித்தார்கள். வேறு எங்கும் இவ்விதம் கண்டதில்லை. சீன்கள், மின்சார அமைப்புகள், பின்னணி சங்கீத அமைப்புகள் எல்லாம் [illegible] கள் நீடு வாழ்கென வாழ்த்துகின்றேன்," என்றுகூறி தலைமையுரையை முடித்தார்.

பின்னர் தொழர்கள் பி. ஆர். மீனாட்சிசுந்திரம், டி. கே. சீனிவாசன், கணேச அய்யர் முதலியோர் பேசினார்கள். உள்ளூர்பிரமுகர்களும் நண்பர்களும் கிருஷ்ணசாமிக்கும் நடிக்கர்களுக்கும்சுமார் ரூ5000 பேருமானமுள்ள வெள்ளிக்கோப்பைகளும், பொற்பதக்கங்களும், மோதிரங்களும் வழங்கினர். கடைசியாக சபைத்தலைவர் கிருஷ்ணசாமி நன்றிகூறி, அடுத்த முகாம் பெங்களூர் செல்வதாய் கூறினார்.

பின் தமிழ்த்தாய் வணக்கம் நடைபெற்றது நாடகமுறையில். இதில் கவியரசர் அவர்களின் 'துன்பம் நேர்மையில்' என்ற பாட்டை தலைவனும் தலைவியும் பசுவினின்றும் பால் சுரக்க பாடுவது-(நிழல் காட்சியாய்) மிக்க உருக்கமாயும் உள்ளத்தை கவருவனவாயும் இருந்தது. பின் இவர்கள் பால் கொண்டுவந்த தமிழன்னைக்குவைத்து பண்டைய நூல்களைப்பாடி வர்ணிக்கின்றனர். அதுவே தமிழன்னை ஆகின்றது. ராமர் பட்டாபிஷேகம் இல்லாமல் இப்புதிய முறையை இவர்கள் முதன் முதல் கையாண்டது நாடகக்கலையில் ஓர் புரட்சி என்றே கூறலாம்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram, (N. A.)